NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 29 January 2015

# தனியார் மறுவிற்பனை வீட்டு விலைகள் சரிவு

சிங்கப்பூர் வீட்டு விலைக் குறியீடு வெளியிட்டுள்ள கணிப்புகளின் படி தனியார் மறுவிற்பனை வீட்டு விலைகள் சென்ற மாதம் மீண்டும் சரிந்தன.

மத்தியப் பகுதியில் உள்ள வீடுகள் ஆக அதிக சரிவைக் கண்டுள்ளன.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் சொத்து விற்பனைத் துறையால் வீட்டு விலைக் குறியீடு தொகுக்கப்படுகிறது.

அந்த அறிக்கையின்படி கடந்த மாதம் அதற்கு முந்தைய மாதத்துடன் ஒப்புநோக்க ஒட்டு மொத்த விலைகள் 1.2 விழுக்காடு இறங்கின.

கடந்த நவம்பர் மாதம் அதற்கு முந்தைய மாதத்துடன் ஒப்பு நோக்க விலைகள் 0.4 விழுக்காடு சரிந்தன.

அதற்கு நேர்மாறாக, 506 சதுர அடிக்குக் குறைந்த சிறிய வீடுகளின் விலைகள் நவம்பர் மாதத்துடன் ஒப்புநோக்க 0.5 விழுக்காடு அதிகரித்தன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.